Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 15 செவ்வாய்க்கிழமை [29-06-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 184

## விடத்தல்தீவுப் பகுதியில் இருந்து பொதுமக்கள் வெளியேறுகின்றனர்

### தள்ளாடி முகாம் ஷெல்லுக்கு ஐவர் பலி!

மன்னார், ஜூன் 29

மன்னார் தள்ளாடி முகாமில் இருந்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் சிக்கி விடத்தல்தீவுப் பகுதியில் பொதுமக்கள் ஐவர் பலியாகினர் என்று புலிகளின் குரல் அறிவித்தது.

'போர்க்கோஷம்' படையினர் பள்ளமடுவை நோக்கி மேற்கொண்டுள்ள முன்னேற்ற முயற்சிகளின் போதே இந்த ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அகோர ஆட்டிலறி ஷெல் வீச்சுக்களினால் விடத்தல்தீவுப் பகுதியில் இருந்து பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறிக் கொண்டிருப்பதாக மன்னாரில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை முதல் மக்கள் பெரும் எடுப்பில் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். கோவில்குளம், கள்ளியடி, பூராய், இலுப்பைக்கடவை, கட்டாடிவயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இலுப்பைக்கடவையில் இயங்கிய

## அடம்பன் உதவி அரச அதிபர் அலுவலகம் மூடப்பட்டது

மன்னார், ஜூன் 29

படையினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை அடுத்து இலுப்பைக்கடவைப் பகுதியில் இயங்கி வந்த அரச அலுவலகங்களும் பொது நிறுவனங்களும் கடந்த சில தினங்களாகச் செயலிழந்துள்ளன.

இலுப்பைக்கடவையில் இயங்கிவந்த மாந்தை மேற்கு அடம்பன் உதவி அரச அதிபர் பணிமனை, வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கம் என்பன இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளன.

அவற்றை அங்கிருந்து இடம் மாற்றுவது குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சு மற்றும் விமானக் குண்டு வீச்சு காரணமாக இலுப்பைக் கடவைப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி வருவதால் அங்கு இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

[ஐ-ரி]

# பள்ளமடுச் சந்தியை எட்ட முன்னர் படையினர் நகர்வு நிறுத்தப்பட்டது!

## மன்னார் ஆஸ்பத்திரியில் 36 சடலங்கள் ஒப்படைப்பு

வவுனியா, ஜூன் 29

விடுதலைப் புலிகளுடையவை எனத் தெரிவிக்கப்படும் 36 சடலங்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் நேற்று பொலீஸாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் நேற்று நண்பகல் வைத்தியசாலைக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டார்.

அவற்றில் 28 சடலங்கள் பெண்களுடையவை என்றும் 8 ஆண்களுடையவை என்றும் மன்னார் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

அடையாளம் தெரியாத வகையில்—காயங்கள் தெரியாத முறையில் —, காணப்படும் அந்தச் சடலங்களில் சீருடைகளும் சாதாரண உடைகளும் காணப்படுவதாக சடலங்களை நேரில் பார்த்த உள்ளூர் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அ. புரம் ஆஸ்பத்திரியில்

## சிப்பாய் ஒருவரின் சடலம் இனங்காணப்படவில்லை

மட்டக்களப்பு, ஜூன் 29

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது பலியான 28 படையினரில் 27 பேரின் சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒரு சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அச்சடலம் அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்துள்ள 183 படையினரில் பலத்த காயமடைந்த 56 பேர் அனுராதபுரம் பொது வைத்தியசாலையிலும்—ஏனைய 127 பேரும் அனுராதபுரம் விக்டரி இராணுவ வைத்தியசாலையிலும்—

அனுமதிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-21-ரி]

## அம்பாறை நிந்தவூரில் மின்மாற்றி தகர்ப்பு!

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அரசடித் தோட்டத்தில் நேற்று அதிகாலை மின்மாற்றி ஒன்று இனந்தெரியாதோரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கக் கூடிய வகையில் இந்தக்குண்டு முன்கூட்டியே பொருத்தப்பட்டிருந்ததாக சம்மாந்துறைப் பொலீஸார் தெரிவித்தனர்.

சேதமடைந்த மின்மாற்றியின் பெறுமதி சுமார் 5லட்சம் ரூபா என்றும்—

இதன் காரணமாகச் சுமார் 300 குடும்பங்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும்—

இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-ரி]

## புலிகள் கடுமையான எதிர்ப்பு

வவுனியா, ஜூன் 29

மன்னார்-பூநகரி வீதியில் பாப்பாமோட்டையிலிருந்து பள்ளமடுச் சந்தியை நோக்கி முன்னேறுவதற்கு படையினர் மேற்கொண்ட 'இராணுவ நடவடிக்கை பள்ளமடுச் சந்தியை எட்ட முன்னரே நிறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் காட்டிய கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த நகர்வு முயற்சி நிறுத்தப்பட்டது.

'போர்க்கோஷம்-4' இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டமாக பள்ளமடுச் சந்தியை நோக்கிய இந்த நகர்வை கடந்த சனியன்று அரசுப் படைகள் ஆரம்பித்தன.

சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இரு கட்டங்களாக பள்ளமடுச் சந்தியை நோக்கிப் பெரும் எடுப்பில் முன்னேற படையினர் முயன்றனர். அச்சமயம் இடம்பெற்ற கடும் சண்டைகளில் இருதரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

இவ்விரு தினங்களும் இடம்பெற்ற படைநடவடிக்கையில் மொத்தம் 67 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை படையினர் கைப்பற்றியதாக வவுனியா படைவட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

பள்ளமடுச் சந்திக்கு தெற்கே 2 கிலோ மீற்றர் வரை முன்னேறிய நிலையில் —பள்ளமடுச் சந்தியைக் கைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று விமானத் தாக்குதல்

வவுனியா, ஜூன் 29

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கிபிர் சுப்பசொனிக் விமானங்கள் மன்னார் பகுதியில் பல இடங்களில் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### குடாக்கடற் பகுதியில் ஷெல் சத்தங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றிரவும் நேற்று முன்தினம் இரவும் விட்டு விட்டு பூநகரி, கல்முனை, கௌதாரி முனைப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் நடத்தப்பட்ட ஜீப் மீதான தாக்குதல்

### பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சி

வவுனியா, ஜூன் 29

அனுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த ஜீப் மீது நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் ஈரப்பெரியகுளம் பகுதியில் வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று படையினரில் இருவர் நேற்று உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் ஏற்கனவே உயிரிழந்த சிப்பாயுடன் சேர்த்து இதுவரை மூன்று படையினர் மரணமாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இத்தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நேற்றுக் காலை அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்ட படையினர் கறுத்த சீருடை அணிந்திருந்த — விடுதலைப் புலிப் போராளி எனச் சந்தே

(10 ஆம் பக்கம் பார்க்க)

### மடுவுக்கு யாத்திரிகர்கள் புறப்பாடு

கொழும்பு, ஜூன் 29

கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் நேற்று மடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு மண்முனை விசேட அதிரடிப்படை முகாமை நோக்கி மண்முனை வாவிக்கு அப்பால் உள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9 அம்சக் கோரிக்கை தொடர்பாக

# தமிழர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் மாகாண ஆளுநருடன் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப் பட்ட 9 அம்சக் கோரிக்கை கள் நிறைவேற்றப்படாவிட் டால் அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஒரு நாள் சுகயீனப் போராட்டம் நடத்த வடக்கு - கிழக்கு மாகாணப் பாட சாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் தீர்மானித்துள் ளனர்.

இது தொடர்பான முன்ன றிவித்தல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பந்திரான, வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர்ஜென ரல் அசோகா ஜெயவர்த்தனா ஆகியோரிடம் வழங்கப்பட்டி ருப்பதாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இந்த முன்னறிவித்தலைத் தொடர்ந்து 9 அம்சக் கோரிக்கை தொடர்பாகப் பேச்சு நடத்த தமிழர் ஆசிரி யர் சங்க தூதுக்குழுவை ஆளு நர் அழைத்துள்ளார். இப் பேச்சுவார்த்தை இன்றுகாலை 11 மணிக்கு திருகோணமலை யிலுள்ள ஆளுநர் அலுவலகத் தில் நடைபெறும். (ஐ-ரி)

## சமூகக்கல்வி அறிவுப்போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 29

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களி டையே சமூகக்கல்விப் பாடம் சம்பந்தமான அறிவுப்போட்டி பிரிவு ரீதியாக ஜூலை மாதம் எட்டாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடை பெற உள்ளது.

தரம் 6 முதல் 8 வரை கனிஷ்ட இடைநிலைப் பிரிவு எனவும்—

தரம் 9 முதல் 11 வரை சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு எனவும்—

இரண்டு நிலைகளில் இந்தப் போட்டிகள் இடம்பெறும்.

பிரிவு ஒன்றுக்கான போட்டி கள் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடை பெறும்.

பிரிவு இரண்டுக்கான போட் டிகள் மருதனார்மடம் இராம நாதன் கல்லூரியில் நடை பெறும்.

பிரிவு மூன்றுக்கான போட் டிகள் மல்லாகம் மகா வித்தி யாலயத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள உள்ள மாண வர்களின் பெயர் விவர விண் ணப்பங்களை ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

(ஐ-152)

### பள்ளமடுச்...

(முதலாம் பக்கத் தொடர்)

பற்றாமலேயே— படை நடவ டிக்கை நிறுத்தப்பட்டிருக்கின் றது.

இந்த நகர்வின் போது படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட தாக படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

புலிகளின் தாக்குதலில் டாங்கி ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகவும் ஏனைய சில டாங்கிகளுக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டதாக வும் பாதுகாப்பு வட்டாரங் கள் தெரிவித்தன.

அதேவேளை —

இலுப்பைக் கடவைக்கு வடக்கே புலிகளின் ஆட்டிலறி நிலை ஒன்றை விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்கள் மூலம் அழிந்து விட்டதாக படை வட்டா ரங்கள் தெரிவித்தன.

[ஐ-2-21-164-ரி]

### நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தன.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகள் மீதும் கிபிர் விமானங்கள் சுமார் ஒரு மணி நேரம் வட்டமிட்டதால் இடம்பெயர்ந்து வீதியோரங் களிலும் மரநிழல்களிலும் தங்கியிருந்த மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

நேற்றைய குண்டு வீச்சுக் களினால் ஏற்பட்ட சேதவிவ ரங்கள் தெரியவரவில்லை.

(ஐ-ரி)


## D. M. I.

### A/L - 99 பரீட்சை அட்டவணை

| | பகுதி I | பகுதி II |
|---|---|---|
| வணிகக் கல்வி | 30 - 06 - 99 | 8 - 07 - 99 |
| வணிக புள்ளி விபரவியல் | 2 - 07 - 99 | 6 - 07 - 99 |
| பொருளியல் | 7 - 07 - 99 | 12 - 07 - 99 |
| கணக்கீடு | 14 - 07 - 99 | 15 - 07 - 99 |

அனைத்துப் பரீட்சைகளும் காலை 8. 30 மணிக்கு (ப. நே.) ஆரம்பமாகும்.

D. SAM

(சி/8026)

## ரதி வாச்வேக்ஸ்

96 ஆம் ஆண்டிற்குப் பின் எம்மிடம் திருத்த வேலை களுக்காகக் கொடுக்கப்பட்ட கடிகாரங்களை ஒரு மாத தவணைக்குள் குறித்த சிட்டையுடன் வந்து பெற்றுக் கொள்ளவும். தவறின் அதற்கு நாங்கள் பொறுப் பாளிகள் அல்லர் என்பதையும் தெரிவித்துக் கொள் கின்றோம்.

ரதி வாச்வேக்ஸ்
இல. 62, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (66871)

## சர்வதேச தரமுடைய 'றொக்லண்ட்' மதுபான வகைகள்

- சிலோன் அரக்
- ஓல்ட் அரக் 'அதிசக்தி'
- த்றீ ஸ்ரார் சாராயம்
- ஓல்ட்ஹெக் விஸ்கி
- லெமன் ஜின்
- றம்
- றை ஜின்
- ஓல்ட் அரக்
- ஹனபியர் பிரண்டி

நிதான விலையில்

கிடைக்குமிடம்:

வாமாஸ்
121/2, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல. 2989

(66949)


# ஆஸ்பத்திரிகளுக்கு நேற்று முதல் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 29

நாடெங்கும் உள்ள ஆஸ் பத்திரிகளுக்கு நேற்று முதல் பொலீஸ் பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டிருப்பதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது.

தமது பாதுகாப்புக்கு உத் தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரி யதை அடுத்து ஆஸ்பத்திரி களில் பொலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

பொலீஸ் பாதுகாப்பை அதிகரிக்குமாறு சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பொலீஸ்மா அதிப ரைக் கேட்டுக் கொண்டதை அடுத்து நேற்று நண்பகல் முதல் பொலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை—

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட் டம் 15ஆம் நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

(ஐ-ரி)

### சினைப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொக்கட்டிச்சோலைப் பிர தேசத்திலிருந்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சினைப் பர் தாக்குதலில் அதிரடிப் படைச் சிப்பாய் ஒருவர்காய மடைந்தார். அவர் மட்டக் களப்பு போதனா ஆஸ்பத்தி ரியில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளார். (உ-21)

### மடுவுக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

தேவாலயம் நோக்கிப் புறப் பட்டனர்.

யாத்திரிகர்களை ஏற்றிக் கொண்டு பல வாகன அணிகள் நேற்று மடுவுக்குப் புறப்பட்டுச் சென்றதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரி வித்தன.

மடுதேவாலய உற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடை பெற இருக்கிறது [ஐ-164]

### குடாக்கடற்...

[முதலாம் பக்கத் தொடர்]

பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

எனினும் ஏற்பட்ட சேத விவரங்களை அறிய முடிய வில்லை.

இதேவேளை யாழ். கடல் நீரேரியில் நேற்று மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிக் கப்படவில்லை.

(உ-15-17)

### விடத்தல்தீவுப்...

[முதலாம் பக்கத் தொடர்]

கொண்டு வெளியேறி வருகின் றனர்.

பாப்பாமோட்டைப் பகுதி யில் இருந்து பள்ளமடுச்சந்தி நோக்கி முன்னேறிவரும் 'போர்க்கோஷம்' படையினர் நேற்றுப் பகல் முழுவதும் பலத்த ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டதாக கள முனைத் தகவல்கள் தெரிவித் தன.

விடத்தல்தீவுப் பகுதியில் ஷெல் வீச்சுக்குப் பலியான ஐந்து பொதுமக்களினதும் பெயர் விவரங்கள் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

(ஐ-ரி)

### மோ. சைக்கிள்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

மோதுண்டதாகக் கூறப்படு கின்றது.

தலையில் பலமாக அடி யுண்டதால் மயக்கமுற்ற அவர் யாழ். ஆஸ்பத்திரி அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சைக்குட் படுத்தியபோது மரண மானார். (ஐ-15-139)

## 3 ஆவது நாளாக போக்குவரத்து துண்டிப்பு

வவுனியா, ஜூன் 29

மன்னாரில் படையினர் ஆரம்பித்த இராணுவ நடவ டிக்கையினைத் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கான போக்குவரத்து நேற்று மூன் றாவது நாளாகவும் தடைப் பட்டிருந்தது.

இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இந்தப் போக்குவரத்துத் தடை இன்னும் சில தினங்கள் நீடிக்கப்படும் என்று படை அதிகாரிகள் மன்னார் செய லக அதிகாரிகளுக்குத் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை —

வவுனியா — மன்னார் வீதி யில் அமுலில் இருந்த போக்கு வரத்துத்தடை நேற்று நீக்கப் பட்டது. (ஐ-ரி-164-21)

### அதிஉயர்..

[முதலாம் பக்கத் தொடர்]

கிக்கப்படும் — ஒருவரின் சட லத்தைக் கண்டெடுத்து வவு னியா வைத்தியசாலையில் ஒப் படைத்தனர்.

கிளைமோர் தாக்குதலை அடுத்துப் படையினர் மேற் கொண்ட எதிர்த் தாக்குத லின்போது இவர் கொல்லப் பட்டதாகப் படை வட்டாரங் கள் தெரிவித்தன.

அதிஉச்சப் பாதுகாப்பு வல யம் எனக் கருதப்படும் பகுதி யிலேயே புலிகளின் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து தெற்குப் பக்கமாக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஈரப் பெரியகுளம் இராணுவ முகா மும் வவுனியா நகரின் தென் புற நுழைவாயிலின் இரா ணுவ வீதிச் சோதனை தடை முகாமும் அமைந்துள்ளன.

சம்பவஇடத்துக்கு வடக்கே சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் பாதுகாப்புப் படையின் வன்னிப் பிராந்தி யத் தலைமையகமும் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது.

கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்தப் பகுதிக்குள் ஊடு ருவிப் புலிகள் நடத்தியிருக் கும் இத்தாக்குதல் படையினர் மத்தியில் பதற்றத்தை ஏற் படுத்தியுள்ளதாகச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-ரி)

## ஆஸ்பத்திரியில் சமையல்கூடம் அமைப்பு

நெல்லியடி, ஜூன் 29

மந்திகை மருத்துவமனை யில் மூன்றேகால் இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் சமையல் கூடம் மீண்டும் நேற்றுமுதல் முழுமையாகசெயற்பட ஆரம் பித்தது.

முன்னர் இந்தப் பிரிவு தனியான ஓர் அறையில் வைத்தே சமையல் வேலை கள் நடைபெற்று வந்தன.

தற்பொழுது இந்தப் பிரிவு முழுமையாக பல வருட காலத்தின் பின்னர் புனர மைப்புச் செய்யப்பட்டு வரு வதனாலேயே புதிய புகை போக்கி அமைத்து சமைக்கும் பணி நடைபெறுகிறது.

(இ-109)

## ஆயிரம் ரூபா போலி நோட்டுகள்; மூவர் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 29

பொலன்னறுவை மாவட் டத்தில் போலி ஆயிரம் ரூபா நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டது தொடர்பாக ஹபறணைப் பொலீஸார் மூவரைக் கைதுசெய்தனர்.

இத்தகைய போலி நோட்டு கள் மூன்றை மாற்ற முயன்ற சமயம் ஹபறணை வாசி ஒரு வர் முதலில் கைது செய்யப் பட்டார்.

அவர் கொடுத்த தகவலை அடுத்து தம்புள்ளையில் வைத்து மற்றொருவர் கைது செய்யப்பட்டார். மேலும் 26 போலி நோட்டுக்களும் கைப்பற்றப்பட்டன.

தம்புள்ளையில் கைதான வர் கந்தளாயில் பணியாற் றும் அரச உயர் அதிகாரி என ஹபறணைப் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-21)

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச் சடலங்கள் தொடர் பாக செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு அதிகாரிகளுக்கு அறிவித்து அவர்கள் மூலமாக அவற்றைப் புலிகளிடம் ஒப் படைக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை—

மன்னார் பகுதியில் நடை பெற்ற சண்டைகளில் 86 புலி கள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித் துள்ளது, ஆனால் இந்தச் சண்டையின் போது தங்கள் தரப்பில் 22 பேர் மட்டுமே கொல்லப்பட்டுள்ளதாக புலி கள் அறிவித்துள்ளனர்.

(ஐ-ரி-21-164)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29- 06- 1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மினி சினிமா சங்க அறிவித்தல்

இம்மாதத்துக்கான (ஆனி) உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளாத சகல மினி சினிமா உரிமையாளர்களும் மாத முடிவுக்குள் பெ மினி சினிமா, கே. கே. எஸ். வீதி, (சிவன் கோயில் முன்பாக) என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் சங்கம் மேற்கொள்ளும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு ஆளாவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

— செயலாளர்

(66995)

## ஆத்மார்த்த அஞ்சலி

சிறந்த வைத்திய கலாநிதியும் சமூகசேவையாளரும்
சமயத்தொண்டரும்
அன்பு, அடக்கம், அறிவு நிரம்பியவருமாகிய

### Dr. பொன்னம்பலம் சொர்ணலிங்கம்

அவர்கள் 28-06-99 அன்று அகாலமரணம் அடைந்துவிட்டார். இவரது மறைவு கொக்குவில் வாழ் மக்களுக்கு மாத்திரமன்றி ஏனைய மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

மஞ்சவனப்பதி முருகன் மீது கொண்ட ஆராத அன்பினால் இவர் ஆலயத் திருப்பணிகளுக்கு முன்னின்று உதவும் வள்ளலானார். இவரது ஆத்மா மஞ்சவனப்பதி முருகன் பாதாரவிந்தங்களை அடைந்து ஆறுதலடையப் பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் துயருறுகின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

த. கணேசபிள்ளை
தலைவர்

இ. இராசலிங்கம்
செயலாளர்

நிர்வாகசபை
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
கொக்குவில்.

(66991)

## கண்ணீர் அஞ்சலி

### Dr. P. சொர்ணலிங்கம்

சமூகத் தொண்டுகளுக்கு வாரி வழங்குபவரும், எங்கள் பகுதி மக்களின் இதயத்தில் இடம் கொண்டவருமாகிய Dr. P. சொர்ணலிங்கம் அவர்கள் அகால மரணமான செய்தியை இன்னமும் எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. அவரின் மறைவையொட்டி எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கமும்,
சனசமூக நிலையமும்.

(66993)

## கண்ணீர்க் காணிக்கை

வைத்திய கலாநிதி

### பொ. சொர்ணலிங்கம்

அவர்களது அகாலமரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடையும் வேளையில் அவரது குடும்பத்தவரின் வேதனையில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் ஆண்டவன் அடிகளைப் பணிகின்றோம்.

சங்கரத்தை வாழ் மக்களும்
சங்கரத்தை இந்து வாலிபர் சங்கமும்.

(66994)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு
சிறந்த வைத்திய சேவையை ஆற்றிவந்த
வைத்திய கலாநிதி

### பொ. சொர்ணலிங்கம் (M. B. B. S.)

அவர்களின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு வட்டுக்கோட்டை மக்கள் சார்பில் எமது சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

(66992)

## மரண அறிவித்தல்

### Dr. பொன்னம்பலம் சொர்ணலிங்கம்

கொக்குவிலைச் சேர்ந்த டாக்டர் பொன்னம்பலம் சொர்ணலிங்கம் அவர்கள் நேற்று (28-06-99) காலை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பொ. ஐங்கரன்

ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டி,
கொக்குவில்.

(66990)

## சேவை நலன் பாராட்டு

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் பிரதி அதிபராகக் கடமைபுரிந்து ஓய்வு பெறவுள்ள திருமதி நாகேஸ்வரி ஹென்றி வில்லியம்ஸின் சேவையைப் பாராட்டும் சேவை நலன் பாராட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மேற்படி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் எஸ். தார்சீசியஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-51)

## நிவாரணம்

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நான்காவது கட்ட சமுர்த்தி நிவாரணத்தை வழங்கி வருவதாக சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகள் ஊடாக இந்த சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (இ-17)


பட்லோ
நீர் புகவிடாத
சிமெந்து
PUDLO
Water Proofing
Powder
English Origin
கலர் · பவுடர்
(Pigments)
(Holland and Germany)
Direct importer:
றம்சன்ஸ்
443,
பழைய சோனகத்தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511
434411
(சி/8011)

நாகம்ஸ்
சுன்னாகம்
கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[66950]

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
விஜய், தேவயானி,
ரம்பா மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10.30, 2.30
2ஆம் திகதி முதல்
அண்ணாமலை
[சி/8016]

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
கார்த்திக் - மீனா
நடித்த
மருமகன்
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070- 212223
FOREIGN T. P. NO-
[illegible]
(66667)


## உத்தியோக அ. அட்டை இல்லாமல் ஊழியர் அவதி

அச்சுவேலி, ஜூன் 29

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுக்கு உத்தியோக அடையாள அட்டை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு சங்கத்தின் பொது முகாமையாளர், தலைவர் ஆகியோரின் கையொப்பத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

உத்தியோக அடையாள அட்டைகள் புதிய வடிவமைப்பில் சீரமைப்புச் செய்து வழங்கப்படும் என்று கூறி நிர்வாகிகளால் மூன்று மாதங்களுக்கு முன்னர் இவை திருப்பிப் பெறப்பட்டன.

ஆனால் மீளப்பெறப்பட்ட உத்தியோக அடையாள அட்டைகள் மீண்டும் வழங்கப்படவில்லை.

உத்தியோக அடையாள அட்டைகள் இல்லாமையால் 75 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் தடைமுகாம்களிலும் சுற்றிவளைப்பின் போதும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ - 11)

## இடம்பெயர்ந்தோர் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

சண்டிலிப்பாய் பிரதேச பிரிவில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள தற்காலிக கொட்டில்களின் கூரைகள் பழுதடைந்துள்ளன.

இதனால் மழை பெய்யும் பொழுது இந்தக்கொட்டில்களில் இருக்க முடியாத நிலை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொட்டில்களை மேய்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு இங்கு தங்கியுள்ள மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் 16 நலன்புரி முகாம்களில் 252 குடும்பங்களைச் சேர்ந்த 982 பேர் தங்கி உள்ளனர். (இ - 5)

## சுகாதார ஊழியர்களின் மேலதிக வேலை நேர கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

சுகாதாரப் பகுதியின்கீழ் வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களின் மேலதிக நேர ஊதியம் 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாதம் 525 ரூபா மேலதிக ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது.

இந்தத் தொகை ஜூன் மாதத்தில் இருந்து 675 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது இதற்கான சுற்றறிக்கை ஒன்று சுகாதார அமைச்சில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது [ஐ]

## தீர்த்தக் கிணறு அமைப்பு

வடமராட்சி, ஜூன் 29

தென் புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோவிலில் தீர்த்தக் கிணறு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது (இ-173)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகலிங்கம் செல்லமுத்து

உரும்பிராய் கிழக்கைச்சேர்ந்த திருமதி நாகலிங்கம் செல்லமுத்து 28-06-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் விமலாதேவி, கதிரமலைநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரட்ணம், ஆனந்தராணி ஆகியோரின் அன்பு மாமியாரும். விஜிதா, விஜயகாந்தன், விஜயரூபன் [சுவிஸ்], விஜயமாலா [யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை], விஜபலதா, கஜேந்தினி [சுவிஸ்], லோஜினி, மகிபன் [ஜேர்மனி], தக்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லாவண்யா, சுகன்யா, அருண்மாறன், ஆரன்யா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [29-06-99] செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 11-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. கதிரமலைநாதன்
[மகன்]

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

[சி/8027]

### சின்னையா சந்திரசேகரம்

[இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்,
கோகிலாக்கண்டி, கைதடி]

கோகிலாக்கண்டி கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா சந்திரசேகரம் அவர்கள் 28-6-99 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சி கணபதிப்பிள்ளை, திருமதி ச. சிதம்பரப்பிள்ளை, திருமதி ச. சிவஞானசுந்தரம் [கல்வி வலயம், தென்மராட்சி], ச. சிறீகாந்தன் [மாநகர சபை, யாழ்ப்பாணம்] ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [28-6-99] திங்கட்கிழமை மாலை தச்சன்தோப்பு மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. சிறீகாந்தன்
[மகன்]

கோகிலாக்கண்டி,
கைதடி.

[சி/8028]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த இந்தியா இரு நிபந்தனைகள்

புதுடில்லி, ஜூன் 29

★ இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ள பாகிஸ்தான் படைகள் வெளியேற வேண்டும்.

★ இனிமேல் ஊடுருவல் செய்யமாட்டோம் என்று உறுதிமொழி தரவேண்டும்.

இந்த இரு நிபந்தனைகளையும் பாகிஸ்தான் நிறைவேற்றினால் அந்த நாட்டுடன் பேச்சு நடத்த முடியும் என்று இந்தியா அமெரிக்காவிடம் உறுதிபடக் கூறிவிட்டது.

இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் புதுடில்லி வந்த அமெரிக்க துணை வெளிவிவகார [illegible] ஜிப்சன் லாம்பரிடமே இந்திய அதிகாரிகள் இதைத் தெரிவித்தனர்.

சர்வதேச சமூகத்தின் ஒன்றுபட்ட கோரிக்கையின்படி இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ள தமது துருப்புக்களை பாகிஸ்தான் மீளப் பெற வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளது என்றும்— அதன் மூலமே அமைதியைப் பேணமுடியும் என்றும்— லாம்பர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கத் தாம் இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவில்லை என்றும் — எந்தவித சமாதான திட்டத்துடனும் வரவில்லை என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பாகிஸ்தானுக்கான கடன்; அமெரிக்கா நிறுத்தலாம்

வாஷிங்ரன், ஜூன் 29

பாகிஸ்தானுக்கு மாதா மாதம் வழங்கி வரும் 10 கோடி டொலர் கடன் உதவியை இந்த மாதம் அமெரிக்கா நிறுத்தலாம் என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளரை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்திய எல்லைப் பகுதியில் இருந்து பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெறச் செய்ய அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுக்க விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச அழுத்தம் பாகிஸ்தானுக்கு எதிராகக் கிளம்பியுள்ள இந்த நிலையில் அமெரிக்கா மேற்கொள்ளவிருக்கும் இந்த நடவடிக்கை பாகிஸ்தானைப் பெரிதும் பாதிக்கும் என்று கூறப்பட்டது.

பாகிஸ்தானுக்கு மாதா மாதம் அமெரிக்கா 10 கோடி டொலர்களை மானியக் கடனாக வழங்கி வருகின்றது.

இந்தக் கடனை அமெரிக்கா நிறுத்துமாயின் வறிய நாடான பாகிஸ்தான் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (இ-3)

## புலிக்குன்றுப் பகுதியில் கடும் சண்டை நடக்கிறது

ஸ்ரீநகர், ஜூன் 29

கார்கில் பிரதேசத்தில் உள்ள சாண்டு, சார்பலாவ, புலிக்குன்று ஆகிய பகுதிகளில் ஊடுருவல்காரருக்கும், இந்தியத் துருப்புக்களுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளது.

இந்திய விமானப்படையின் 24 மணிநேரக் குண்டுவீச்சுத் தொடர்கின்றது என்றும் —

விமானப் படையின் உதவியுடன் தரைப்படை ஊடுருவல்காரரை விரட்டி வருகின்றது என்றும் — இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற சண்டைகளில் 25 பாகிஸ்தான் படையினர் உயிரிழந்தனர் என்றும் —

புலிக்குன்றுப் பகுதியில் இருந்து ஊடுருவல்காரர்கள் விரட்டப்பட்டு விட்டனர் என்றும் — இந்திய படை அதிகாரிகள் தெரிவித்தனர். [இ-3]

## உலக அரங்கில்

# குடிதண்ணீருக்கு சவூதியில் பஞ்சம்

றியாத், ஜூன் 29

சவூதிஅரேபியாவில் பெரும் குடிதண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

அங்கு வெப்ப நிலை அதிகரித்துள்ளதால் குடிதண்ணீர் இல்லாததால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வாரத்தில் ஒருநாள் இரு மணிநேரம் மட்டும் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது என்றும்—

மக்கள் நெரிபட்டு கொள்கலன்களில் அவற்றைச் சேமிக்கின்றனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

உவர் நீரை நன்னீராக்கும் தொழிற்சாலைகள் ஒழுங்காகப் பராமரிக்கப்படாததே இந்த நிலை ஏற்படக் காரணம் எனக் கூறப்பட்டது.

கடந்த 30 வருடங்களில் இப்போதுதான் குடிதண்ணீருக்குப் பெரும் பிரச்சினை தோன்றியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆயுதப் பரிசோதனைக் குழு அமெரிக்காவுக்கு உளவு

நியூயோர்க், ஜூன் 29

ஈராக்குக்குச் சென்ற ஆயுத பரிசோதனைக் குழு அமெரிக்காவுக்கு உளவு வேலை பார்த்தது என்ற குற்றச்சாட்டை ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் ஏற்றுள்ளார்.

ஈராக்கில் உள்ள ஆயுதங்களைப் பரிசோதனை செய்யச் சென்ற ஐ.நா வின் ஆயுத பரிசோதனைக் குழு அமெரிக்காவுக்கு உளவு திரட்டும் பணியில் ஈடுபட்டதாக ஈராக் முன்பு குற்றஞ் சாட்டியிருந்தது.

இந்தக் குற்றச் சாட்டை ஏற்றுள்ள கோபி அனான், இந்தச் செயல் ஆயுத பரிசோதனைக் குழுவை இழிவு படுத்தும் செயல் என்பதுமட்டுமல்ல எதிர்காலத்தில் ஆயுத பரிசோதனை நடவடிக்கைகளையும் பாதித்துள்ளது என்று கூறியுள்ளார். (இ-3)

## சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஷெரீப் பயணமாகிறார்

கார்கில் பிரதேசத்தில் சண்டை உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

சீனாவுக்கான ஆறுநாள் விஜயத்தை நேற்று ஆரம்பித்துள்ள ஷெரீப் அங்கு தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக ஆராய்வார்.

தமது தரப்பு விடயங்களை விளக்கி சீனாவின் ஆதரவை அவர் கோருவார் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனைச் சந்திக்க நேரம் ஒதுக்கித்தருமாறு ஷெரீப் கேட்டுள்ளார்.

தமது நிலைப்பாட்டை விளக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஆதரவு இந்தியாவுக்கு சாதகமாக அமைந்துள்ள இன்றைய நிலையில் ஷெரீப் எடுக்கும் முயற்சிகள் சண்டை தொடர்ந்து நடைபெறப்போகின்றது என்பதையேகாட்டுகின்றன என்றும்

அவரின் விஜயங்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் — இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-3]

# கருணாநிதியின் அழைப்பை மூப்பனார் நிராகரிப்பு

சென்னை, ஜூன் 29

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து தேர்தலில் போட்டியிடுமாறு தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி விடுத்த அழைப்பை தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் நிராகரித்துள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியுடன் தி. மு. க. மற்றும் சில தமிழகக் கட்சிகள் இணைந்து அமைத்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் போட்டியிட வருமாறு தமிழக முதலமைச்சரும், தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி அண்மையில் மூப்பனாருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கருணாநிதியின் அழைப்பை ஏற்க முடியாது என்று தெரிவித்த மூப்பனார் மூன்றாவது கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாகப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்றும்—

இடதுசாரிகள் இதற்கு ஆதரவு தர முன்வந்துள்ளன என்றும்— கூறினார். (இ-3)

## சியராலியோனில் யுத்தம் முடிவுக்கு வருகிறது

சியராலியோனில் நீண்டகாலமாக தொடர்ந்த இனப்போருக்கு முடிவு காணும் முகமாக அரசுக்கும் போராளிக் குழுவுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக இடம்பெற்று வந்த பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அடுத்து இரு தரப்புக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு விவகாரத்திலேயே பேச்சுக்களில் இழுபறி நிலவியது. (இ-3)

## மீள் குடியேற்றப் பணி ஐ. நா. ஆரம்பித்தது

பிறிஸ்ரீனா, ஜூன் 29

கொசோவோவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் அரைவாசிப் பங்கினர் தமது இருப்பிடங்களுக்கு மீளத் திரும்பியதை அடுத்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அகதிகளை மீளக்குடியமர்த்தும் பணியை நேற்று ஆரம்பித்தது.

கொசோவோவில் இருந்து இடம்பெயர்ந்து அல்பேனியா மசெடோனியா ஆகிய நாடுகளில் தங்கியிருந்த சுமார் 4 லட்சம் அகதிகளில் சுமார் 2 லட்சம் பேர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

இந்த நிலையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பணி ஆரம்பமாகியுள்ளது.

400 அகதிகளைக் கொண்ட முதலாவது அணி நேற்று கொசோவோவுக்குப் புறப்பட்டதாக அந்த அமைப்புத் தெரிவித்தது. (இ-3)

## இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்

பேரூட், ஜூன், 29

இஸ்ரேல் மீது லெபனான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் இரு பொதுமக்கள் உயிரிழந்தனர். 12 பேர் காயம் அடைந்தனர்.

குடியிருப்புப் பகுதிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பொதுமக்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து இஸ்ரேல் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களையும், வழி மறிப்புப் போராட்டங்களையும் நடத்தினர். (இ-3)

## மற்றொரு அழிவு ஏற்படும் என்கிறார் கோபி அனான்

நியூயோர்க், ஜூன் 29

நேட்டோ படைகளின் தாக்குதலில் சீரழிந்துள்ள யூகோஸ்லாவியாவின் புனரமைப்புக்கு நிதி உதவிகள் வழங்கப்படாவிட்டால் மற்றுமொரு பேரழிவுக்கு வழிவகுத்ததாகிவிடும் இப்படி ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

நேட்டோ படைகள் யூகோஸ்லாவியா மீது மேற்கொண்ட விமானத் தாக்குதலால் அந்த நாடு பெரிய அளவில் சீரழிந்துள்ளது.

இந்த நாட்டைப் புனரமைக்க நிதி வழங்க வேண்டும் என்று உலக நாடுகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது

ஆனால் நிதி வழங்கக் கூடாது என்று நேட்டோ நாடுகள் உலக நாடுகளைக் கேட்டிருந்தது.

இவ்வாறு புனரமைப்புக்கு நிதி உதவி வழங்காவிட்டால் மற்றுமொரு பேரழிவு ஏற்படும் என்று கோபி அனான் சர்வதேச சமூகத்திடம் தெரிவித்துள்ளார். (இ-3)

## 140 பேர் மரணம்

கொங்கோகுடியரசில் கெரில்லாக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் 140 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் [illegible] [illegible] [illegible]ட்டது.


உ

சிவமயம்

இளவாலை ஒல்லுடை

**அருள்மிகு ஞானவைரவர் கோயில்**

புனராவர்த்தன அஷ்டபந்தன

பஞ்சகுண்டபக்ஷ

**மஹாகும்பாபிஷேகம்**

நிகழும் பிரமாதி வருஷம் ஆனி மாதம் 17 ஆம் நாள் (01 07—1999) வியாழக்கிழமை

திருவோண நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய 9 மணி 14 நிமிஷம் முதல் 11 மணி 3 நிமிஷம் வரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில்

மஹாகும்பாபிஷேகம்

ஆனி 16 ஆம் நாள் (30-06-99) புதன்கிழமை

எண்ணெய்க் காப்புச் சாத்துதல்

[9. 00 — 4. 00]

பிரதிஷ்டாகுரு

''சிவாச்சார்யமணி''

சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்கள்

(ஆனைவிழுந்தான் விநாயகர் கோயில், இளவாலை)

ஆலய பரிபாலன சபை.

(66989)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## CAR FOR SALE

Volkswagan 1300 cc Padded Steering Ganna Model Well Maintained Many Extras Immaculate Condition Contact :- T. Kailanathan, 17 / 10, St, Anne's La ne, Chundikuli.

[66926]

## தவறிவிட்டது

கந்தையா சதீஸ்குமார் ஆகிய எனது மோட்டார் வாகன சாரதி லைசன்ஸ் (DL No. A 001044168) யாழ்ப்பாணத்துக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கல்பனாஸ் பட்டுச் சோலை, இல. 16, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(66894)

அல்வாய் மேற்கு, வன்னிய சிங்கம் புஷ்பராணி என்பவருடைய வைத்தியசாலை கிளினிக் கொப்பி 16-6-99 இல் பருத்தித்துறை செல்லும் பஸ்சில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து குறிஞ்சி தையலகம், நெல்லியடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(66984)

## காணி விற்பனைக்கு

தாவடியில் கே. கே. எஸ். றோடடுக்கு அண்மையில் 3 பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். விஷ்ணு கிறீம் ஹவுஸ், கே கே. எஸ். றோட், கோண்டாவில். (66976)

## ரீ.விகள் விற்பனைக்கு

2030, 2060, 20்2 மற்றும் 27'' Sony, Netional ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிந்த விலையில்) எஸ். சதாகரன், மூளாய் றோட். மத்தியூஸ் லேன், சுண்டுக்குளி.

(66978)

## நிர்வாகசபை

காரைநகர் போறூட் நூலக வளர்ச்சிக் கழகத்தின் 1999 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு நூலக மண்டபத்தில் நூலக வளர்ச்சிக் கழகத் தலைவர் நா. குகநேசன் தலைமையில் நடைபெற்றது. (இ-73)

---

# நூல் வெளியீட்டு நிகழ்வு

நூல்:

**தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்**

ஆசிரியர்:

திரு. செல்லையா கிருஷ்ணராஜா M A.

(முதுநிலை விரிவுரையாளர்- வரலாற்றுத்துறை)

இடம்: கேட்போர் கூடம் - பல்கலைக்கழக நூலகம்

காலம்: 30 - 06 - 1999 புதன்கிழமை

பிற்பகல் 12-30 மணி [இலங்கை நேரம்]

விளம்பர அன்பளிப்பு:

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(66988)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தவப்பேறு 03 — 10 — 1996

சிவப்பேறு 10 — 07 — 1998

செல்வன்

**பரமானந்தம் அஷாந்த்**

(வீடியோ ஆனந்த் ஸ்ரூடியோ உரிமையாளர் மகன்)

திதி: 29-06-1999

இளம் புன்னகை வீசி
இனிக்கும் மழலை பேசி — எம்
இல்லம் சிறக்க வாழ்ந்தவனே!
இனி எந்தக் காலம் உன்
புன்னகை முகம் காண்போம்
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டானாலும் உன் உருவம்
அழியாமல் எம் நெஞ்சங்களில்...

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அப்பா, அம்மா, திபியக்கா, சோபியக்கா, நிசாந்த் அண்ணா.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(66982)

---

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 — 03 — 1912

மறைவு 30 — 05 — 1999

திருமதி

**தம்பாபிள்ளை அம்மணிப்பிள்ளை**

சேர்ச்லேன் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த எமது அம்மா - அம்மம்மா திருமதி தம்பாபிள்ளை அம்மணிப்பிள்ளை அவர்கள் 30-05-99 இல் வெள்ளவத்தையில் காலமானார். இவரது இறுதிக் கிரியைகள் 02-06-99 இல் பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெற்றன. இறுதிக் கிரியைகளிலும், பின்னர் 14-06-99 இல் நடைபெற்ற அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறி எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த உறவினர்களுக்கும் பின்னர் 15-06-99 இல் பம்பலப்பிட்டி சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மதியபோசன விருந்தில் கலந்து கொண்ட எல்லா உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று நாமும்; ஆஸ்திரேலியாவிலிருக்கும் திரு. த. பத்மநாதன் (பட்டயக் கணக்காளர்—மகன்) திரு. த. யோகநாதன் (கணக்காளர் — மகன்) திரு. த. லோகநாதன் (மகன்), திருமதி ப. சறோஜினி (மருமகள்), திருமதி யோ. தர்மதேவி (மருமகள்), திருமதி லோ. தயானி (மருமகள்), திருமதி சிவபாலன் இந்திரமணி (பேர்த்தி), திருமதி குமார் இந்திரமதி (பேர்த்தி), திருமதி தவேந்திரன் அருணா (பேர்த்தி), திரு. ப. தும்பா (பேரன்), திரு. ப. கனா (பேரன்), திருமதி ஐங்கரன் அமணி(பேர்த்தி), செல்வி யோ. சுதர்சினி (பேர்த்தி), செல்வன் யோ. திருவூரன் (பேரன்) செல்வி லோ. லோஜிகா (பேர்த்தி), செல்வன் லோ. தர்மிலன் (பேரன்) பூட்டப்பிள்ளைகளான த. மிருநாளினி, த. அனந்தன், சி. நர்மதா, சி. சாருலதா, கு. சுகன்யா, கு. மிதுலா, கனடாவிலிருக்கும் திருமதி நாகேந்திரம் தவமணி (மகள்), திருமதி செல்வவிநாயகம் சிவபாக்கியம் (மகள்), திருமதிநிமால் இந்திரஜோதி (பேர்த்தி), திருமதி சுதாகரன் சியாநிதி (பேர்த்தி), திரு. தங்கவடிவேலு அகிலன் (பேரன்). நி. தாரணி (பூட்டி), சு. பிரவீன் (பூட்டன்), சு. சரணியா (பூட்டி) பிரான்சில் இருக்கும் திரு. செல்வவிநாயகம் செல்வேந்திரன் (பேரன்), திருமதி செல்வேந்திரன் இசபெல்லா (பேர்த்தி). செ. தம்பு இந்திரன் (பூட்டன்), செ. மத்தியாஸ் செல்வன் (பூட்டன்) லண்டனில் இருக்கும் திரு. நாகேந்திரன் சுபேந்திரன் (பேரன்), திருமதிசுபேந்திரன் சூட்டி(பேர்த்தி), திரு செல்வவிநாயகம் செல்வநேசன் (பேரன்), டென்மார்க்கில் இருக்கும் நாகேந்திரம் பாலேந்திரன் (பேரன்), வெள்ளவத்தையில் இருக்கும் செல்வி தங்கவடிவேல் ரமணி(பேர்த்தி), திருமதி அகிலன்சுமித்திரா(பேர்த்தி), செல்வி சிவகுமார் வினுஜா (பூட்டி), செல்வன் திலகன்ரமணன்(பூட்டன்) செல்வி திலகன் துவாரகா (பூட்டி). வவுனியாவில் இருக்கும் செல்வன் தியாகராசா பார்த்தீபன் (பேரன்), செல்வன் தியாகராசா இளங்கோ (பேரன்), ஆகியோரும் இறைவனை நெஞ்சம் நெகிழப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று காளியாமூலை வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி இல்லத்தில் நடைபெறும் மதியபோசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தங்கவடிவேல் அற்புதமணி [மகள்]
திருமதி சிவகுமார் லோஜினி [பேர்த்தி]
திரு. சிவகுமார் [பேரன்]
[உரிமையாளர்-சுசாஸ் சொப்பிங், வெள்ளவத்தை]
இல: 56, விவேகானந்தா வீதி, வெள்ளவத்தை.

திருமதி இ. திலகன் கனகரத்தினம் செல்வநிதி [பேர்த்தி]
திரு, இ. திலகன் கனகரத்தினம் [பேரன்]
[சட்டத்தரணி கொழும்பு]
இல. 45, விவேகானந்தா றோட், வெள்ளவத்தை.

திருமதி தியாகராசா சிவசோதி [மகள்]
திரு. நாகலிங்கம் தியாகராசா [மருமகன்]
அயோத்தி, காளியாமூலை வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

[சி/8005]

---

உ

# உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஆனி மாதம் 16 ஆம் நாள் (30-6-99) புதன்கிழமை உத்தராடநட்சத்திரமும் துதியைதிதியும் கூடிய காலை 7-45 மணி முதல் 8-55 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

வேலம்பிராய் அம்மன் தேவஸ்தான பிரதமகுரு நல்லூர் க. சச்சிதானந்தக்குருக்கள் — வாலாம்பிகை தம்பதிகளின் பௌத்திரனும், செல்லப்பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு மட்டுவில் அ. விஸ்வநாத ஐயர் — ஜெகதாம்பிகை தம்பதிகளின் தௌகித்திரனும்,

எமது புத்திரனுமாகிய

**சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ சி. ஸ்ரீகர சர்மா** அவர்களுக்கு

யகஞோப விததாரண பிரம்மோப தேச உபநயனம்

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சமேதராக வந்து எமது குமாரனை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள்:

சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்— பிருந்தா தம்பதியினர்
(வேரற்கேணி கந்தசுவாமி ஆலயம் மட்டுவில், சாவகச்சேரி)
சிவப்பிரம்மஸ்ரீ பா. முரளிதரக்குருக்கள் — நாகபூஷணி தம்பதியினர் — நல்லூர்.
சிவப்பிரம்மஸ்ரீ ச. சர்வேஸ்வரசர்மா (சபா) — நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

முகூர்த்த நிர்ணயம்: வி. பரமேஸ்வர சர்மா, உடுவில்.
உபநயன குரு: ஞானகுரு அவர்கள் நுணாவில், சாவகச்சேரி

தங்கள் நல்வரவை விரும்பும்
பிரம்மஸ்ரீ ச. சிவசாமிக்குருக்கள் அங்கயற்கண்ணி தம்பதியினர்,
சி. ஸ்ரீமோகன், சி. ஸ்ரீரங்கன்
பிரதமகுரு, ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்.

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(சி/8025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை - காங்கேசன் நிரந்தர கப்பல்சேவை

# அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்ப்பதாக ஒபடகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் நிரந்தரக் கப்பல் சேவையை நடத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் தலைவர் என். கே. ஒபடகே தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும் இந்தச் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மாதத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்வதற்கு மக்கள் மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை இருந்து வருகிறது.

தற்பொழுது 4 ஆயிரம் பேர் வரையில் இந்தப் பயணத்திற்கு விண்ணப்பித்துவிட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, கொழும்பு போன்ற இடங்களில் காத்திருக்கின்றனர்.

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலுள்ள 150 கிலோ மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு மாதக்கணக்கு செல்வதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-5)

## ஐ. நா. தூதரக அலுவலகம் முழங்காவிலுக்கு இடம்மாறும்

கொழும்பு, ஜூன் 29

மல்லாவியில் இயங்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகம் முழங்காவிலுக்கு இடம்மாற்றப்படவிருக்கின்றது.

மல்லாவியில் இருந்து வெளியேறுமாறு படையினர் கோரியதை அடுத்தே இந்த அலுவலகம் இடம் மாறுவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் மல்லாவியில் இயங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உட்பட ஏனைய தொண்டர் அமைப்புக்களின் அலுவலகங்கள் இடம்மாறுவது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் — அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [இ-3]

## தனியான பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

சுன்னாகம், ஜூன் 29

வடமராட்சிப்பகுதியில் 750 ஆம் இலக்க பாதை வழியாக அரச ஊழியருக்கென்று தனியான பஸ்சேவை ஒன்றை நடத்துமாறு அப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பகுதியில் இருந்து வரும் பஸ்களில் உரிய நேரத்துக்கு யாழ்ப்பாணம் வரக் கூடியதாக இருப்பதில்லை எனவும் இடநெருக்கடி அதிகம் காணப்படுவதாகவும் தெரிவித்த இவர்கள், அரச ஊழியருக்கென தனியானபஸ்சேவையை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் உட்பட பல அரச ஊழியர்கள் கையெழுத்திட்டு இக்கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். [இ-27]

## பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 29

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பட்டினிக்கு எதிரான நிறுவனம் அண்மையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளையும் உணவுப் பொருள்களையும் பழுதுபடாது பாதுகாத்து வைத்தல், உணவு பதனிடுதல் ஆகியன தொடர்பான ஒரு வாரகால பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தியது.

இப்பயிற்சி வகுப்பில் 30 பெண்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். [இ-135]

## கொள்வனவு

வலி.கிழக்கு, ஜூன் 29

வலி, கிழக்கு பிரதேச சபைக்கென உழவு இயந்திரம் ஒன்று பிரதேச சபையின் நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

குப்பைகளை அகற்ற இது பயன்படுத்தப்படும். (இ-180)

## காது அறுத்து தோடு அபகரிப்பு

புன்னாலைக்கட்டுவன், ஜூன் 29

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான திருவிழாவில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிய பெண் ஒருவரின் தோடு அபகரிக்கப்பட்டுள்ளது.

தோடு அபகரிக்கப்பட்டபோது அந்தப் பெண்ணின் காதும் அறுந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப பெண் தற்பொழுது காதுக்குச் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-133)

# செயல் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவு

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தின் முதற்கட்டம் நிறைவு பெற்றுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாக சங்கங்களின் பொதுச்சபை கூடி ஆராய உள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையின் போது சங்கங்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளதோடு சங்கங்கள் மேற்கொண்ட செயல்பாடுகளும் ஆராயப்பட்டன. (இ-17)

# குருநகர் ஆஸ்பத்திரியை தரம் உயர்த்தக்கோரிக்கை

குருநகர், ஜூன் 29

குருநகர் அரசினர் வைத்தியசாலையை கிராமிய வைத்தியசாலையாக தரம் உயர்த்துமாறு கோரும் மகஜர் ஒன்றை குருநகர் அரசினர் வைத்தியசாலைஅபிவிருத்திக்குழு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஊடாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த வைத்தியசாலையை கிராமிய வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு பின்வரும் காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அதிக மக்கள் செறிந்து வாழும் பகுதி குருநகர் ஆகும். இங்குள்ள மக்கள் சிறு சிறு நோய்களான காய்ச்சல், மலேரியா, தொய்வு, வயிற்றோட்டம் போன்றவற்றுக்கு சிகிச்சை பெற இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

கொழும்புத்துறை, அரியாலை, பாஷையூர் கொய்யாத் தோட்டம், சுண்டுக்குழி போன்ற இடங்களில் வாழும் மக்களில் தினமும் சராசரி 300 பேருக்கு மேற்பட்டோருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. (இ-51)

## மீள்பரிசீலனை

உரும்பிராய், ஜூன் 29

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கான நிவாரணம் பெறுபவர்களின் குடும்பப் பெயர்ப் பட்டியல்கள் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

பங்கீட்டு அட்டைகளில் இடம்பெற்றுள்ளவர்களில் கொழும்புக்கு அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றோரின் பெயர்கள் உள்ளனவா என்பது ஆராய்ந்து உறுதிப்படுத்தப்படும். (இ-154)

## கண்காட்சி

சுழிபுரம், ஜூன் 29

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய சிரேஷ்ட பிரிவு மாணவர்களின் கல்வியியற் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர். ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. [இ-28-ரி]

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9. 30 மணிக்கு குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெறும்.

நில அளவைத் திணைக்கள ஓய்வு பெற்ற மா அதிபரும் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் தலைவருமான கலாநிதி தா. சோமசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சதாநிதி சோமசேகரம் பரிசில்களை வழங்குவார். (க)

## நோயாளர் கப்பல் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம். ஜூன் 29

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் நோயாளர் சேவையில் ஈடுபடும் செஞ்சிலுவை சர்வதேசக்குழுக் கப்பலின் சேவை திருத்த வேலைகளுக்காக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

யாவாஹல்ப் என்ற இந்தக் கப்பல் திருத்த வேலைகளுக்காக தற்பொழுது கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சேவைமீண்டும் அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் நடைபெறும். என்று தெரிவிக்கப்படுகிறது (இ-5

# ஆரம்பப் பிரிவு மாணவருக்கு தனியான உடற்பயிற்சி தேவை

## உடற்பயிற்சி இறுதிப் போட்டியில் உரை

குருநகர், ஜூன் 29

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தனியான உடற்பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற உடற்பயிற்சி இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

உடற்பயிற்சி இறுதிப் போட்டி யாழ். கல்வி வலய கல்விமேம்பாட்டுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை மேலும் தெரிவித்ததாவது—

மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்ற இன்றைய நிகழ்வு யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தை வெளிக்காட்டியது. எமது திறமைகள், சாதனைகள் யாவும் தேசிய நிலையிலும் வெளிக்காட்டப்படவேண்டும்.

முன்னர் யாழ். மாவட்டத்தில்இருந்துவிளையாட்டுவீரர்கள் வருகிறார்கள் என்றால் கொழும்பில் உள்ள விளையாட்டு வீரர்கள் கூடப் பயப்பட்டார்கள் அந்த அளவுக்கு எமது விளையாட்டு வீரர்கள் சிறந்து விளங்கினர்— என்றார்.

க. கனகசிங்கம் தமது தலைமையுரையில், இலங்கையில் வேறு எங்கும் இல்லாத நிலையில் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. வடக்கு—கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவரும் இன்னல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் நாம் கிரமமான முறையில் விளையாட்டுப் போட்டிகளை எமது பாரம்பரிய மரபுகளைப் பேணி நடத்தி வருகிறோம்.

வலைப்பந்து, கரபந்து, மென்பந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்திய எமது உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் இன்று அணிநடைப் போட்டியையும் சிறப்பாக நடத்தி உள்ளார்— என்றார்.

யாழ். வலயக் கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா தமது நன்றியுரையில், உடற்பயிற்சிப் போட்டி யாழ்ப்பாணத்தில் தனித்துவம் மிக்கது. அதற்கென்று பாரம்பரியம் உண்டு. இப்போட்டி 15, 19 வயதுப் பிரிவினர்க்கென நடத்தப்பட்டது. யாழ்.வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கென அப் பாடசாலைகள் கலந்து கொள்ள வசதியான இடங்களில் இப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கோப்பாய் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியிலும், நல்லூர் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பிரிவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடத்தப்பட்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்கு கொண்ட போட்டி இன்று இங்கு நடைபெற்றது.

இப்போட்டியை நடத்த உதவி செய்த அனைவர்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன் — என்றார்.

யாழ். கல்வி வலயக் கல்வி மேம்பாட்டுக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் க. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற உடற்பயிற்சி இறுதிப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வின் ஆரம்பத்தில் வேம்படி மகளிர் உயர் பாடசாலை மாணவிகளின் பான்ட்வாத்திய இசையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

வெற்றியீட்டிய அணிகளுக்கான கேடயங்களையும், சான்றிதழ்களையும் பிரதம விருந்தினர் வழங்கினார். (இ-51)

A/L 2000
A/L 2001
LOGIC
பிரத்தியேக வகுப்புகள்!
எஸ். எஸ். மனோகரன்
♣ 40 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
♣ 2000 மாணவர்களுக்கு பகுதி I உம் II உம் சம காலத்தில் கற்பிக்கப்படும்.
♣ ஆரம்பம்: 3 - 7 - 99 சனி மாலை 5மணி
11, குருசோ வீதி யாழ்ப்பாணம்.
[ஆசனக்கோவிலுக்கு அருகில்] [66970]

யா / தெல்லிப்பழை
சைவப்பிரகாச வித்தியாசாலை
பழைய மாணவர் சங்கம்
எமது பாடசாலை 2000 ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட உள்ளது. இதுவரையில் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாத பழைய மாணவர்கள் அனைவரையும் உடன் அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.
— நன்றி —
அதிபர் செயலாளர்
(66895)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்


யாழ்ப்பாண கல்வி வலய மட்டத்தில் நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டியில் எமது பாடசாலையின் இரு அணிகளும் (15 வயதின் கீழ், 19வயதின் கீழ்— பெண்கள்) முதலாம் இடத்தைப் பெற்றமையையிட்டு நிறுவுநர் நாளாகிய இன்று (29 — 06 — 99) வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்,

பழைய மாணவர் சங்கம்,
யா/ வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/ 8022)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1920 — 03 — 20



மறைவு 1998 — 07 — 10

**திருமதி நா. நகுலம்மா**

திதி: 29.06.99 பிரதமை

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் வந்துமென்ன — வேரென
நீயிருந்தாய் அதில் நாம்
வீழ்ந்துவிடாதிருந்தோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சந்தா தோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(66916)

## ஈராண்டு நினைவஞ்சலி



செல்வன்

**குகதாசன் சிறீதரன்**

மலர்வு 30–10–1967
உதிர்வு 29–06–1997

திதி: ஆனி அபரபக்க தசமி 08–07–99

வாழவென்று வந்திங்கு
வாழ்வில் பாதியில் சென்றனையே!
வதங்கி விழுந்த உனக்காக — நாம்
வைத்த மலர்களோ வாடவில்லை!
வாடா மலராய் எம் நெஞ்சில்
வாழும் எங்கள் மூத்தண்ணா!
ஓராண்டல்ல, ஈராண்டல்ல
உள்ளும் நாளும் உறைந்திடுவாய்.

என்றும் உன்னினைவில் வாழும்
அப்பு, அம்மா,
சின்னண்ணா, குஞ்சன், அச்சா

முதலியாவளவு,
இமையாணன்,
உடுப்பிட்டி.

[66966]

## தாக்குதல்

வவுனியா, ஜூன் 29

வவுனியாவில் தாக்குதல் சம்பவமொன்றில் உயிரிழந்த தமது போராளி ஒருவரின் நினைவாக தாம் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெற்ற மோதலொன்றில் உயிரிழந்த கப்டன் சியாஸ் [பத்மசீலன்] நினைவாக கடந்த 20 ஆம் திகதி இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா இரணை இலுப்பைக்குள ராணுவமுகாமிலிருந்து தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தினர். [இ–5]

## கண்காட்சியும் விற்பனையும்

அரியாலை, ஜூன் 29

ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கத்தில் பயிற்சி பெற்றோரினால் யாரிக்கப்பட்ட தையல் மற்றும் அலங்காரப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் எதிர் வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை மேற்படி சங்கத்தில் நடைபெறவுள்ளது. (உ–17)

## பொதுக் கூட்டம்

உரும்பிராய், ஜூன் 29

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூலை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் அ. க. த. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறும். (இ-154)

## அமைதி வேண்டிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூன் 29

நாட்டில் அமைதி வேண்டி அபிஷேகம், பூசை, பஜனை, கூட்டுப்பிரார்த்தனை என்பன எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் டம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெறுகின்றது. (க)

## வாழ்த்துகின்றோம்

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில்
முதலாந்தர அதிபராகச் சிறப்புமிகு சேவையாற்றிய

**திரு. க. தனபாலசிங்கம்**

அவர்கள் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு
உதவிக் கல்விப் பணிப்பாளராக

பதவி உயர்வு பெற்றுச் செல்வதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்,

உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், சிற்றூழியர்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

(சி/8009)

## 41 ஆவது நாள் நினைவஞ்சலி



**திருமதி சிவசுப்பிரமணியம் சிவனேஸ்வரி**

(ஜேர்மனி)

தோற்றம் 05 – 03 – 1957
மறைவு 20 – 05 – 1999

எமது அருமை மகனின் அன்பு மனைவி திருமதி சி. சிவனேஸ்வரியின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாமன் இராசையாவும்
துணைவியாரும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு
கொக்குவில்.

(66957)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஆனி மாதம் 16 ஆம் திகதி (30-06-1999) புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள துவிதியை திதியும் உத்திராட நஷத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

அரியாலை
திரு. செல்லப்பா
திருமதி ருக்மணி
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**ஐயந்தனுக்கும்**



கொழும்புத்துறை
திரு. மாசிலாமணி
திருமதி பத்மலோசனி
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**குமுதினிக்கும்**

திருவருள் துணைகொண்டு தெகிவளை கன்னிமாரா மண்டபத்தில் மாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அசுதருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தும், தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்தும் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி ஸ்ரீகாந்தன்
திரு, திருமதி கணேசலிங்கம்
9/2, அறத்துசா ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு - 6,
இலங்கை தொலைபேசி: 583430

திருமதி பத்மலோசனி மாசிலாமணி
110, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு) (66828)

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிமிர்வது எப்போது?

இந்த ஆண்டு முடிவதற்குள் மேலும் இரண்டாயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என அறியப்படுகிறது. கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அனேகமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அளவில் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1997 ஆம்ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களில் தகுதியானவர்கள், ஆசிரியர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஏற்கனவே இரண்டு தடவைகள் தமிழ் மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு இருந்தும் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில மேலும் 4,500 தமிழ்மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலப் பிரச்சினை. இப்போதுதான் அதுகுறித்து சிறிது கவனம் செலுத்தப்படுகிறது.

ஓய்வுபெறும் ஆசிரியர்களின் இடங்களை நிரப்பும் வகையில் வருடாந்தம் புதியவர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் ஓரள வேனும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கியிருக்கலாம். வருடாந்தம் அதிகரிக்கும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப, தேவையை நிறைவேற்றும் விதத்தில் வருடாந்தம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டால் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இயலும.

அவ்வாறன்றி இரண்டு மூன்று வருட இடைவெளியின் பின்னரும் தேவைக்குக் குறைந்த எண்ணிக்கையினரை நியமிப்பதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பது கஷ்டம.

தேர்தல் நெருங்கும்போது ஆசிரியர் நியமனங்களைச்செய்வது அரசியல் நோக்கம்கொண்டதாகவே கருதப்படும். ஆகையால் வருடாந்தம் இந்த நியமனங்களைச் செய்வதற்கென ஒரு திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறையாக்கப்படுவது மிக அவசியம்.

சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக உள்ளதாகவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்குப் பற்றாக் குறை நிலவுவதாகவும் உலக வங்கி தனது அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டி இருந்தது.

கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களிலும் இப்போது உலக வங்கிக்கு அதிக செல்வாக்கு இருப்பதாக, அதாவது அந்த வங்கி வகுத்து வழிகாட்டும் திட்டங்களுக்கு, சிபார்சுகளுக்கு ஏற்பவே அரசு செயற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்யக்கூடாது; இவ்வாறுதான் கல்வித் திட்டங்கள், நடவடிக்கைகள் அமைய வேண்டும்; என்று சொல்லும் அளவுக்கு உலக வங்கியின் செல்வாக்கும் அதிகாரமும் மேலோங்கி உள்ளதாம்.

அது உண்மையாயின் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் தேவையை நிறைவேற்ற எடுக்கப்படும் அக்கறையும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையும் தமிழ்மொழி மூல ஆசிரியர் நியமனத்திலும் இனிமேலாவது அவசியம்.

தமிழ் மக்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுதில் தொடர்ந்தும் சமநிலை பேணப்படவில்லை என்றால், அது அவர்களின் அடிப்படை மனித உரிமைகளைக் பறிப்பதற்கு ஒப்பாகும். உலக வங்கியின் செல்வாக்கு இருக்கும்போதே இவ்விவகாரம் சீராக்கப்படவில்லை என்றால் பின்னர் ஒரு போதும் நிமிரமாட்டாது!

# போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்க

# மற்றொரு முயற்சி 'ரமோனா' படகு

**மன்னாருக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான ''ரமோனா'' பாதைப் படகுச் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சேவையை எப்படியும் நடத்துவதில் அதன் உரிமையாளர் நம்பிக்கை கொண்டுள்ளார்.**

ஐரிஷ் மோனா, தராகி, லங்கா முடித்த என்பன வடபகுதியில் — குறிப்பாக யாழ்ப்பாணத்தில் — வாழும் மக்களின் வாய்களில் அடிக்கடி உச்சரிக்கப்பட்டு வரும் பெயர்கள்.

இதேபோன்று இனிமேல் உச்சரிக்கப்படப் போகின்ற ஒரு பெயர் ''ரமோனா''

முன்னர் மன்னார் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது மன்னாரின் போக்குவரத்துத் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தன. மன்னார் தீவைத் தவிர ஏனைய அனைத்துப் பெருநிலப்பரப்பும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தது.

## மன்னாரிலிருந்து 4 மணி நேரப் பயணம்

அதனால் தரைவழிப் போக்குவரத்து அற்றுப்போயிருந்தது. இந்த நிலையில் மன்னாரிலுள்ள மக்கள் வன்னிக்குச் செல்வதானால் மன்னாரிலிருந்து — விடத்தல் தீவுக்கு படகுகளிலும், தென்பகுதி செல்வதானால் மன்னார் இறங்கு துறையில் இருந்து கற்பிட்டிக்கு படகுகளிலும் செல்லவேண்டும்.

இதில் விடத்தல் தீவு—மன்னார் பாதைக்கான கடல் ஆழம் குறைந்தது. குறுகிய நேரத்தில் சென்றுவரக் கூடியது. அதனால் சிறிய ரக பிளாஸ்டிக் படகுகளே சேவையிலீடுபடுத்தப்பட்டு வந்தன.

ஆனால் மன்னார்— கற்பிட்டிப் பாதையில் கடல் மிக மிக ஆழமானது. பெருங்கடல் என்று சொல்லப்படுகிற அலைகளும்,' ஆழமுங் கூடிய கடல். சுமார் 8 மணி நேரப் பயணம். எனவே இவைகளுக்கு சிறிய படகு ரகத்திலும், பெரிய கப்பல் ரகத்திலும் சாராத இடைத்தர றோலர்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறான பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'ரமோனா 1'', ''ரமோனா 2'' என்ற பாதைப்படகுகள் இரண்டிற்குமே இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கான பயணிகள் சேவைக்கு பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் தமது கப்பல்களைச் சேவையிலீடுபடுத்தத் தயாராக இருந்தன; இருக்கின்றன. ஆயினும் இலங்கை அரசு அதற்குத் தெளிவான ஒரு பயண உத்தரவாதத்தை வழங்கத் தயாராக இருக்கவில்லை.

உள்நாட்டில் சேவையிலீடுபடும் கப்பல்கள் இலங்கைக் கொடியுடனேயே சேவையாற்ற வேண்டுமென அரசு கேட்டது. ஆனால் இலங்கைக் கொடியுடன் சேவையில் ஈடுபட்டால் புலிகளின் அச்சுறுத்தல் இருக்குமென அந்த நிறுவனங்கள் தெரிவித்து வந்தன.

திருகோணமலையிலிருந்து சேவையாற்றும் கப்பல்கள் பாதுகாப்பு நிமித்தம் குறிப்பிட்ட கடல் மைல்களைத் தாண்டித்தான் பயணம் செய்ய வேண்டும்.

ஆனால் குடாநாட்டுக்குக் கப்பல் விடத் தயாராகவிருந்த நிறுவனங்கள் அவ்வளவு கடல் மைல் தூரத்தில் பயணம் செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

தற்போது வடபகுதிக்கான நிரந்தர போக்குவரத்து இன்மையினால் குடாநாட்டு அபிவிருத்திக்கு இந்த வருடத்தில் வெளிநாடுகள் உதவி வழங்காமை மற்றும் இன்றைக்கு அல்லது நாளைக்கு திறந்து விடலாம் என்றிருந்த வவுனியா-யாழ். தரைப் பாதை, இப்போது திறக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லாமை ஆகிய காரணங்களால் தான் தற்போது ரமோனா படகுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

### ரமோனா படகு

அண்மையில் ஜனாதிபதி குடாநாட்டுக்கான கப்பல் சேவையை நடத்த தனியார் எவராவது முன் வந்தால் பரிசிலிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதனை

**ரமேஷ்**

யடுத்து மன்னாரிலுள்ள சகாதர்தாஸ் குரூஸ் என்ற தனியார் ஒருவர் தன்னிடமுள்ள ரமோனா பாதைப்படகை சேவையிலீடுபடுத்த அனுமதி கோரி ஜனவரி 12 இல் ஜனாதிபதிக்கு முதல் கடிதம் அனுப்பினார். பின்னர் பாதுகாப்பு அமைச்சு மீண்டும் ஜனாதிபதி என மாறிமாறி கடிதம் அனுப்பியதில் இந்த நீண்ட இடைவெளியின் பின் திடீரென அவருக்கு அனுமதி வழங்கும்கடிதம் அண்மையில் அனுப்பப்பட்டது.

அதில் கப்பல் உரிமையாளரின் பெயரில் இலங்கையில் பதியப்பட்டிருக்க வேண்டும். கப்பலுக்கும் பயணிகளுக்கும் காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் கப்பல் கடலில் ஓடுவதற்காக வழங்கப்படும் கால எல்லைச் சான்றிதழ் முடிவடையாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தால் சேவையை நடத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து 97 ஆம் ஆண்டு ஒகஸ்டில் கட்டப்பட்ட 150 ஆசனங்களைக் கொண்ட 130 குதிரை வலு சக்தியைக் கொண்ட 2 இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 50 தொன் எடையைக் கொண்ட ரமோனா பாதைப் படகுகளை சேவையிலீடுபடுத்தும் முயற்சிகளை அந்தத் தனிப்பட்ட வர்த்தகர் மேற்கொண்டார்.

இதன்படி 'ரமோனா-1' தற்போது மன்னார் தீவுக்குச் செல்லும் வாசலில் மன்னார் கோட்டைக்கு முன்னாலுள்ள பாலத்தின் அருகில் பாதி நீரிலும், பாதி தரையிலுமாக நிற்கிறது.

மன்னார் பெருநிலப்பரப்பு இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு தரைவழிப்பாதை திறக்கப்பட்டதைபடுத்து கற்பிட்டி — மன்னார் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அன்று முதல் மன்னாரில் 'ரமோனா-1' உம், கற்பிட்டியில் 'ரமோனா-2' உம் தரித்து நிற்கின்றன.

தற்போது 'ரமோனா-1' மன்னாரில் தற்போதுள்ள இடத்தில் வைத்தே திருத்தப்பட்டு விட்டது. தற்போது மன்னார்க்கடலில் நீர்மட்டம் மிகவும் குறைந்திருக்கிறது. இது இன்னும் சில நாள்களில் அதிகரித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீர் மட்டம் அதிகரித்ததும் கப்பல் இழுத்துச் செல்லப்பட்டு தலைமன்னாரிலுள்ள கடற்படையினரிடம் காட்டப்பட்டு போக்குவரத்துக்கான அனுமதி பெறப்பட்டுவிடும்.

கப்பலுக்கு ஆட்களைப் பதிந்து அனுப்புவது அதற்கான சிவில் நிர்வாக நடைமுறைகள் தொடர்பாக மன்னார். யாழ்.அரச அதிபர்களுடன் பேச்சு நடத்தி அந்தப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்ற நடைமுறைகளை மேற்கொள்ள அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

### பாதுகாப்புப் பிரச்சினை

அடுத்து பாதுகாப்பு நடைமுறைகளில் சிறு சிக்கல்கள் ஏற்பட்டது. அதுவும் கடற்படையினருடன் பேசி தீர்க்கப்பட்டு விட்டது. அதன்படி பேசாலையிலும் குறிகாட்டுவானிலும் பயணிகள் ஏறும் இறங்கும் இடங்களிலும் கடற்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவர்.

அத்துடன் அவர்களின் பணி முடிந்து விடும். அதன்படி பேசாலை குறிகாட்டுவானுக்கிடையிலான 4 மணி நேர கடல் பயணத்தில் கடற்படையினரின் பாதுகாப்போ குறுக்கீடோ இருக்காது.

இவ்வாறான தலையீடுகளும் பயணிகளுடன், படையினர் பயணம் செய்யும் நிலையும் இல்லையானால் புலிகளின் அச்சுறுத்தல்களும் இருக்காது என நம்பப்படுகிறது.

பயணிகளிடம் 150 ரூபா வரையில் கட்டணம் அறவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் முன்னர் கற்பிட்டி சேவைக்கு 150 ரூபா தான் அறவிடப்பட்டதாம். இது தவிர 10 கிலோ எடையுள்ள பொருள்களை ஒரு பயணி கொண்டு செல்ல முடியும். மேலதிக எடைக்கு கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலில் 'ரமோனா 1' சேவையிலீடுபடுத்தப்பட உள்ளது. அதன் சீரான சேவையைப் பொறுத்து கற்பிட்டியிலிருக்கும் 'ரமோனா 2- கடற்படையினரின் அனுமதியுடன் இழுத்து வரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும்.

ஆனால் தினசரி போய் உடனே திரும்பி வருவதா அல்லது ஒரு நாள் போய் மறுநாள் வருவதா என்ற நடைமுறையை தீர்மானிக்கும் பொறுப்பு மன்னார் யாழ். செயலகங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னாரிலிருந்து தென்பகுதி செல்வதாயின் பயணிகள் பாஸ்நடைமுறை ஒன்றை எதிர்நோக்க வேண்டும். இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வருவோருக்கு தென் பகுதிக்குச் செல்ல புதிய நடைமுறை ஒன்றை அமுல் படுத்துவதா? அல்லது வழமையான பாஸ் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுமா என்று இன்னமும் முடிவு காணப்படாத சிக்கல் ஒன்றும் இருந்து வருகிறது.

அதேவேளை நீண்டகாலமாக விண்ணப்பித்துவிட்டு வெளிநாட்டிலிருந்து கப்பலை வாடகைக்கு அமர்த்தி விட்டு காத்திருக்கும் எமக்கு அனுமதி வழங்காமல் வேறொருவருக்கு எப்படி அனுமதி வழங்கலாம் என்று கேட்டு பல்வேறு கப்பல் நிறுவனங்களால் பாதுகாப்பு அமைச்சு புனர்வாழ்வு அமைச்சு, ஜனாதிபதி ஆகியோருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறான பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் சுமுகமான மார்க்கத்தில் சென்று வரும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கப்பல் சேவையும் திருகோணமலை கப்பல் சேவைகள் போன்று வெறும் செய்தி பத்திரிகைகளுக்கு அவலாகப் போய்விடும் சமாச்சாரம் தானா என்று தெரியாத நிலையில் மக்கள் அவ்வளவாக இதுபற்றி அக்கறை இல்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

செய்திபாளர்கள் முதல் செயலகத்தினர் வரை விசாரித்துப் பார்த்ததில் ஓடுமாமோ... என்ற ஒற்றைக் கேள்வியிலேயே நிறுத்திக் கொள்கின்றனர்.

ஏனென்றால் ஏற்கனவே பல தடவைகள் ரெண்டர் கோரப்பட்டுள்ளது. கப்பல் வந்துவிட்டது திருத்த வேலைகள் செய்யப்படுகின்றன. என்று கேள்விப்பட்டு அலுத்துச் சலித்துப்போன நிலையில் ஓடினால் பார்ப்போம் என்று எல்லோரும் அக்கறை அற்றுஇருக்க கப்பலின் உரிமையாளருடன் கடைசி நேரத்திலும் தொடர்பு கொண்டபோது ''எந்தத் தடை வந்தாலும் அவைகளுக்கு முகம் கொடுத்து-கப்பல் சேவையை நடத்தியே தீருவேன்'' என்றார். ★

## பாலர் பாடசாலை போட்டிகள்

அரியாலை, ஜூன் 29

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியை ஜூலை 18 ஆம் திகதி நடத்துவதாற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு போன்ற பகுதிகளில் சங்கத்தின் உதவியுடன் பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இந்தப் பாலர் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளை வெகு சிறப்பாக நடத்துவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(இ-17)

## நாளை

ஆனி 16

புதன்கிழமை

திதி: துதியை

முழுநாளும்

நட்சத்திரம்: பூராடம்

காலை: 6.52 வரை.

சுபநேரம்: 4.26—5.56

ராகுகாலம்: 11.56—1.26

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மற்றவர்கள் தாக்கினாலும் அவமதித்தாலும் பழிவாங்க விரும்பாமல் அமைதியாக இருப்பதுதான் பொறுமை.

— விதுர நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காச நோயாளர் எண்ணிக்கை யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். மாவட்டத்தில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்றரை வருடங்களில் 554 காச நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

1996 இல் 111 பேரும், 1997 இல் 173 பேரும், 1998 இல் 190 பேரும், 1999 ஜனவரி தொடக்கம் மே வரையும் 80 பேரும் புதிதாக இந்த நோய்க்காளாகியுள்ளனர்.

எதிர்காலத்தில் காசநோயாளர் எண்ணிக்கை யாழ். மாவட்டத்தில் மேலும் இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[இ-5]

## ஆசிரியர் பற்றாக்குறை

கொழும்புத்துறை, ஜூன் 29

அனலைதீவில் உள்ள சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி பின் தங்கியுள்ளதாக அப்பகுதிப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம் மற்றும் வடலூர் அ.த.க. பாடசாலை, அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை என்பவற்றில் கடந்த 1996 ஆம் ஆண்டு ஐம்பது ஆசிரியர்கள் வரை கடமையாற்றி வந்தனர். என்றும் —

தற்போது குறைந்தளவு நிரந்தர ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியர்களுமே கடமையாற்றுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க - 30)

## மானிப்பாய் லயன்ஸ் வைபவம்

சண்டிலிப்பாய், ஜூன் 29

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் 1999/2000 வருடகால பகுதிக்கான புதிய நிர்வாக சபையின் உத்தியோக பூர்வ பதவியேற்பு வைபவம் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் பிராந்தியத் தலைவரும், யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருமான லயன் டாக்டர் கே. ரி. சிவபாதம் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கழகத்தலைவர் ஏ.இ. செபநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கழகத்தினால் நடத்தப்பட்ட கண்ணுக்கு முதலிடம் கொடுக்கும் சேவைத் திட்டத்தில் கலந்து கொண்டு கண்பரிசோதனைகளையும் அதனோடு தொடர்புடைய 92 கண் சத்திர சிகிச்சைகளையும் மேற்கொண்ட யாழ். அரசினர் போதனா வைத்திய சாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். குகதாசனுக்கு விசேட விருது கழகத்தின் சார்பில் பிரதம அதிதியால் வழங்கப்பட்டது.

கழகத்தின் கண் செயல் திட்ட தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராசா அவருக்கு மலர் மாலை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் சங்கானையைச் சேர்ந்த செல்வநாயகம் தயானந்தா என்ற கண்பார்வை குறைந்த மாணவருக்கு விசேட மூக்குக் கண்ணாடி ஒன்றும் வழங்கப்பட்டது.

[இ-135]

## அடிக்கல் நடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 29

மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய தேர்த்தரிப்பிடம் மற்றும் தேர்முட்டி அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை நீதிவான் இ. த. விக்னராஜாவும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர்.

(க)

## நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

67 ஏபி. எஸ் புள்ளிகளுக்குரிய ஜூன் மாத நிவாரண விநியோகம் ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக தற்பொழுது நடைபெற்று வருகிறது.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா போன்ற பொருள்கள் இந்த நிவாரணத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(இ-7)

## இசை நாடக நாட்டுக் கூத்துப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் கிராமியக் கலைகளான இசை நாடக — நாட்டுக்கூத்துப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ரி)

## கலாசார மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம் ஜூன் 29

பொன்னாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை புதிய கலாசார மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழா வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராஜா, வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோக நாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

(இ - 5)

## நியமனம்

தென்மராட்சி, ஜூன் 29

அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் சிலர் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களில் பயிலுநர்களாக கடந்த புதன்கிழமை முதல் கடமையாற்றுகின்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு ஐந்து பயிலுநர்களும், பளை பிரதேச செயலகத்திற்கு இரண்டு [illegible] நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ-117)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இணுவில் கந்தசாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தின் மஞ்சத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறும். காலை 9 மணியளவில் ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும் நடைபெறும்.

[இ—4]

★ ★ ★

அரியாலை, ஜூன் 29

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது

முதல் 14 நாள்களும் மாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி சுவாமி உள்வீதி வலம் வருதலும் — இறுதி நாளான எதிர் வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு விசேட அபிஷேகங்களுடன் பூசைகள் ஆரம்பமாகி மாலை 3 மணிக்கு வரவப் பெருமான் வெளிவீதி வருதலும் இடம்பெறும்.

[க-17-30]

★ ★ ★

அளவெட்டி, ஜூன் 29

இளவாலை ஒல்லுடை அருள்மிகு ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன, பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை நடைபெறும்.

12 நாள்கள் தொடர்ந்து பூசைகள் நடைபெற்று மண்டலாபிஷேகத்துடன் உற்சவம் பூர்த்தியடையும்.

கும்பாபிஷேக நிகழ்வில் நடேசன் சிவசண்முகமூர்த்தி ''வைரவர் பெருமை'' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

[க-13]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 29

தெல்லிப்பழை [illegible] ஸ்ரீவீரபத்திர சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை 10.40 மணி முதல் 11.10 மணி வரைக்கும் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் கடந்த 25 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

[க]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 29

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

[க]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 29

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.02 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

[க-13-30]

★ ★ ★

தென்மராட்சி. ஜூன் 29

பளை நரசிம்ம வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் மூன்றாம் திகதி காலை [illegible] முதல் பி. ப. 5.00 [illegible] விசேட அபிஷேகங்களுடன் நடைபெறும்.

[க-117]

# மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி அன்ரனற் செல்வராணி பத்திநாதன்

[ஓய்வு பெற்ற ஆசிரியை]

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமான திருமதி மேரி அன்ரனற் செல்வராணி பத்திநாதன் (28-06-99) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற G. W அலெக்சாண்டர் [கூட்டுறவு பரிசோதகர்], திருமதி ரெட்ணராணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், யோசப் பத்திநாதனின் [ஆஸ்திரேலியா] அன்பு மனைவியும், அனா, ஜெரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி அ. செ. சவுந்தரநாயகம் [உப அதிபர் சென் ஜேம்ஸ் மகளிர் வித்.], செல்வராஜா அலெக்சாண்டர் [ஓய்வு பெற்ற அதிபர் மிருசுவில்], ரெட்ணம் [பிரான்ஸ்], நீக்கலஸ் [வவுனியா], யசிந்தா [பிரான்ஸ்], வசந்தி [கனடா], விக்னராஜா [தபால் திணைக்களம் யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள் தந்தை யேம்ஸ் பத்திநாதனின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் [30-06-99] புதன் கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

S. L. சவுந்தரநாயகம்

[மைத்துனர்]

(சென் சாள்ஸ் மகாவித்தியாலய ஆசிரியர்)

இல. 118, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[66985]

### திருமதி மகேஸ்வரி ஐயாத்துரை

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஐயாத்துரை 24-06-99 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ந. ஐயாத்துரை [அராலி] அவர்களின் அன்பு மனைவியும், சோமேசன், ஹீகளினி விமலநாயகி. சகுந்தலா [குட்டி] ஆகியோரின் பாசமிகு தாயாரும், டோனி, குகதாசன், பாலேந்திரா, கனகராஜா [ஞானேஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்றவர்களாகிய தையல்நாயகி சிவஞானம், சதாசிவன், மகேசன், வாலாம்பிகை ராஜேந்திரம் மற்றும் நடேசன், சரஸ்வதி கணேசன். சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 28-06-99 அன்று லண்டனில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ந. சிவசுப்பிரமணியம்

(தம்பி)

Mrs. S. Kanagarajah.
91, Thrale Road,
Stretham.
London SW 16 1N 4,
England.

[66980]

### வேலுப்பிள்ளை காந்தமூர்த்தி

(ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர், தொலைத் தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்-கொழும்பு-புறாணை)

அன்னார் 24-06-99 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார். இவர் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-கமலம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கார்த்திகேசு (உப அதிபர் செங்குந்தா இந்துக்கல்லூரி) கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும், சிவகாந்தன் (ஆஸ்திரேலியா), கைலைவாசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தெட்சணாமூர்த்தி (கொழும்பு), கணேசமூர்த்தி (இந்தியா), சத்தியபாலதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர்களான கந்தசாமி, இரத்தினசபாபதி (ஆசிரியர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சறோஜினிதேவி, தங்கராசா தவமணிதேவி, சுபத்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், ரவிசங்கர் (ஆஸ்திரேலியா), தர்ஷினி (ஆஸ்திரேலியா), செல்வப்பிரியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுபாஜினி, சுதாஜினி ஆகியோரின் சிறிய தந்தையும் கலைவாணி, ஞானகுமார், சிவசங்கரி, சுதன் ஆகியோரின் பெரிய தந்தையாரும், அம்பிகை, ஆரணி, விக்னேஷ், கௌதமன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (30-06-99) புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

மகாலிங்கம் விஜயலட்சுமி

(சோதி),

சகோதரி.

பத்திரகாளி கோயிலடி,
அம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(6689!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருட இறுதிக்குள் 2 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு, ஜூன் 29

இந்த வருட இறுதிக்குள் மேலும் 2 ஆயிரம் பேருக்கு தமிழ் மொழி மூல ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் மூன்றாவது கட்ட நடவடிக்கையாகவே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அந்தந்த மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப இந்த நியமனங்கள் வழங்கப்படும்.

1997 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களில் இருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இந்த நியமனங்கள் வழங்கப்படலாம் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரண தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் 4 ஆயிரத்து 500 வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையாகவே இந்த நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த வருட இறுதிக்குள் சகல வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும் என்று அந்தந்த மாகாண சபைகளுக்குப் பணிப்புரைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

(ஐ ரி)

## காணாமல் போன 14 வயது மாணவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

இரு வாரங்களுக்கு முன்னர் புலோலியிலிருந்து காணாமல் போன பாடசாலை மாணவர் ஒருவர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் வைத்து மாவட்ட இணைப்பாளர் எஸ் ஸ்ரீநராணினால் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

புலோலியைச் சேர்ந்த கந்தசாமி உமாரமணன் (வயது 14) என்ற மாணவரே அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார்.

கடந்த 14 ஆம் திகதி புலோலிப் பகுதியிலுள்ள உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவில் தனது குடும்பத்துடன் கலந்துகொண்ட இவர் அன்று மாலை முதல் காணாமல் போய் விட்டார்.

காணாமல் போன இந்த மாணவன் தொடர்பாக உறவினர்களினால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்படி மாணவனைக் கண்டுபிடித்த தமிழ்க் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவரை ஒப்படைத்தனர்.

(இ-5-6)

## வகுப்புகள்

வடமராட்சி, ஜூன் 29

வடமராட்சிப் பகுதியிலிருந்து அதிபர் தரம் I, II, III சேவைகளுக்கான பரீட்சைக்கான வகுப்புகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றன.

[இ-173]

## ஆயுர்வேத மருந்து தயாரிப்பு நிலையம் யாழ். மாநகரசபை அமைக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்பதற்கான மருந்து தயாரிக்கும் நிலையம் ஒன்றை யாழ். மாநகர சபை அமைக்கவுள்ளது.

மாகாண அமைச்சினால் இதற்கென 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் பேராசிரியர் சு. பவானி தெரிவித்தார்.

இந்த மருந்து தயாரிக்கும் நிலையம் அமைப்பது தொடர்பாக அண்மையில் மாகாண ஆளுநருடன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தியுடன் யாழ். மாநகர ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துரையாடியது குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவு அமையும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சுதேச மருத்துவத்துறையின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்குடன் மாகாண அமைச்சினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் பேராசிரியர் சு. பவானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலையைத் தலைமையகமாகக் கொண்டு ஆயுர்வேத வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கென நகரப் பகுதியில் ஒன்றரை ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 37 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை நிலையத்தை எதிர்காலத்தில் பெரிய ஆயுர்வேத வைத்தியசாலையாக மாற்றுவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தம்பலகாமம் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் அபிவிருத்திக்கு 20 லட்சம் ரூபாவும், வவுனியா மடுகந்தவில் வைத்தியர்கள் தங்கும் விடுதி அமைப்பதற்கு 8 லட்சம் ரூபாவும் —

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் வைத்தியர் விடுதி அமைப்பதற்கு 8 லட்சம் ரூபாவும் —

மாகாணம் முழுவதற்கும் பொதுவான ஆயுர்வேத மருந்து விநியோகிக்கும் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு 28 லட்சம் ரூபாவும் —

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை —

மாகாண அமைச்சின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 16 ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 6 மருந்தகங்களும், திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் தலா 2 மருந்தகங்களும் அமைக்கப்படவுள்ளன.

நெடுந்தீவு, பருத்தித்துறை பகுதிகளில் அடுத்த வருடம் ஆயுர்வேத மருந்தகங்கள் அமைப்பதற்கு 40 லட்சம் ரூபா மாகாண அமைச்சினால் ஒதுக்கப்படவுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ 5)

## மோ. சைக்கிள் விபத்தில் டாக்டர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் டாக்டர் ஒருவர் உயிரிழந்தார்.

வலிகாமம் பகுதியில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்து வந்த வைத்திய நிபுணரான பி. சொர்ணலிங்கம் (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் சிகிச்சை நிலையம் ஒன்றில் இருந்து திரும்பும் வழியில் வீதியில் இவரது மோட்டார் சைக்கிள் மாடு ஒன்றுடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஜூன் 29

தென்மராட்சி அதிபர்கள் சங்கத்தினரும் தென்மராட்சி கல்வி வலய அதிகாரிகளும் இணைந்து அதிபர் சேவைகள் போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இலவச பயிற்சி வகுப்புகளை பிரதி சனி, ஞாயிறு தினங்களில் சாவகச்சேரி கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வோருக்கு பாடக் குறிப்புகளும் கற்றல், கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்படுவதாக அதிபர்கள் சங்கச் செயலாளர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார்

(ஐ-117)

## ஆசிரியர்களுக்கான ஆக்க ஓவியபோட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 29

வலிகாமம் வலய பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே ஆக்க ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது பெயர் விவரங்களை நாளை புதன்கிழமை உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலனுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆக்க ஓவியப் போட்டிகள் ஜூலை மாதம் 17 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

(க-152)

## கால்நடை வளர்ப்போர் கூ. ச. அங்குரார்ப்பணம்

வலிகாமம் தெற்கு, ஜூன் 29

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கென தனியானதொரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதுவரை காலமும் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினராலேயே வலிகாமம் தெற்கு கால்நடை மற்றும் பண்ணையாளர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன.

நீண்டகாலமாக வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கென தனியான கால்நடை வளர்ப்போர் சங்கம் தேவையென வலியுறுத்தப்பட்டு வந்ததைத் தொடர்ந்து இப்பகுதியில் கால்நடை வளர்ப்போர் சங்கத்தை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேற்கொண்டிருந்தார்.

கால்நடை வைத்திய அதிகாரி மகாதேவன், வலிகாமம் தெற்கு பிரதேச பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கணேஸ் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

## அனுமதியின்றி ஏற்றிவந்த மரங்கள் பறிமுதல்

அளவெட்டி, ஜூன் 29

அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் ஒன்றில் ஏற்றி வரப்பட்ட வேப்ப மரங்கள், விறகுகள் என்பனவற்றை அளவெட்டியில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இளவாலைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த மரங்கள், விறகுகள் என்பனவற்றை வீதியிலே எடுத்துச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை மரக் கூட்டுத்தாபனத்திடம் பெறவில்லை என்று தெரிவித்தே படையினர் அவற்றைப் பறிமுதல் செய்துள்ளனர்.

மரக் கூட்டுத்தாபன அதிகாரிகள் நேரில்வந்து மரங்களுக்குரிய பெறுமதியைப் பொறுத்து கட்டணம் அறவிட்டு அனுமதிப்பத்திரம் வழங்கும்வரை மரங்கள், விறகுகளை எடுத்துச்செல்ல அனுமதிக்க முடியாது எனப் படைத் தரப்பில் கூறப்பட்டதாக அறியவந்தது.

(ஜ-13)

## தண்ணீர்த் தாங்கி அமைக்கப்படும்

பருத்தித்துறை, ஜூன் 29

புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் மாணவர்களின் குடிதண்ணீர் வசதி கருதி தண்ணீர்த் தாங்கி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இத் தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-18)


பச்சிலைப்பள்ளி

**கலை கலாசாரப் பேரவையின் 5ஆவது மாபெரும் கலைவிழா**

இடம்: பளை றோ. க. த. க. பாடசாலை அருகில் புலோப்பளை.

காலம்: 1999 06-29 (இன்று) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் 1999-06-30 (நாளை) காலை 6.00 மணி வரை

தலைவர்: திரு. சு. புத்திசிகாமணி (பிரதேச செயலர், தலைவர், கலாசாரப் பேரவை)

பிரதம விருந்தினர்கள்:

திரு. கா. சந்திரராசா முதலாவது நிகழ்வு (பிரதேச செயலர், சங்கானை)

திரு. க. சண்முகநாதன் இரண்டாவது நிகழ்வு (கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

திரு. செ. மெற்றாஸ் மயில் மூன்றாவது நிகழ்வு (செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:

திரு. ச. பாமேஸ்வரநாதன் (திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்)

திரு. செ. சிவராசா (நிர்வாக உத்தியோகத்தர்)

வரவேற்புரை: திரு. இ. நாகேந்திரம் (இணைப்பாளர், கலாசாரப் பேரவை)

ஆசியுரை: திரு. ச. தவராசா (பொருளாளர், கலாசாரப் பேரவை)

வண - பிதா அகஸ்ரின் அடிகளார் (முகமாலை பங்குத்தந்தை)

நன்றியுரை: திரு. க. கனகரத்தினம் (செயலாளர், கலாசாரப் பேரவை)

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| கிராமியப் பாடல்கள் | — பச்சிலைப்பள்ளி அண்ணாவிமார் |
| சிலம்பின் செல்வி | — இசைநாடகம் |
| காத்தவராயன் | — ஆட்டநாட்டுக்கூத்து |
| ஒரு சிரசு பரிசாகிறது | — நாட்டுக்கூத்து |
| சத்தியவான் சாவித்திரி | — இசைநாடகம் |
| கழுவில் ஏறிய காதலன் | — நாட்டுக்கூத்து |
| அரிச்சந்திரா மயானகாண்டம் | — இசைநாடகம் |
| காத்தவராயன் | — ஆட்டநாட்டுக்கூத்து |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

கலை கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், பளை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்
பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்
பளை. (66996)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org